**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.112/2023

Prosecution witness.04

| | |
|---|---|
| பெயர் : ராமபாண்டி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of February 2025.

07.02.2025

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். முதுகுளத்தூர் நாடார் தெருவில் உள்ள எங்கள் வீட்டின் அருகே ஆஜர் எதிரிகள் மூவருக்கும் அ.சா.1ன் முருகேஸ்வரி வீட்டிற்கும் தண்ணீர் பிரச்சனை ஏற்பட்டு, ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டார்கள். இந்த சம்பவத்தில் அ.சா.2 பிரபுவிற்கு வாயில் இருந்து ரத்தம் இருந்தது. நானும், அங்கிருந்த நபர்களும் சத்தம்போட்டு விலக்கிவிட்டோம். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) அ.சா.1 முருகேஸ்வரி எனது பங்காளி முறையில் சித்தப்பா மகள் ஆவார். எனது வீடு அ.சா.1ன் வீட்டிற்கு பின்னால் உள்ளது. நான் சண்டை நடந்ததாக சொல்லப்படும் நேரத்திற்கு பிறகு தான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் எந்தவிதமான சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.112/2023
Prosecution witness.05

| | |
|---|---|
| பெயர் : மாடசாமி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of February 2025.

07.02.2025

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1.** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக வேலை செய்கிறேன். 02.11.2020 ம் தேதி இரவு 09.30 மணியளவில் திடல் நாடார் தெருவில் நான் அங்கு நின்றபோது, முதுகுளத்தூர் போலிசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். அப்போது என்னிடமும், அருண்குமார் என்பவரிடமும் கையொப்பம் கேட்டார்கள். அதில் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசர் அசா.ஆ.2).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) அ.சா.1 முருகேஸ்வரி எனது சித்தி ஆவார். என்னுடன் கையொப்பம் செய்த அருண்குமார் எனது நண்பர் ஆவார். அருண்குமார் எனது பக்கத்து வீட்டுக்காரார் ஆவார். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். பார்வை மகசரில் வடக்கே, தெற்கே என்ன

குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னை 02.11.2020 ம் தேதி இரவு 09.30 மணிக்கு விசாரித்தார்கள்.

2) அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் எந்தவிதமான சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் பின்னிட்டு தயாரிக்கப்பட்ட பார்வை மகசரில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.